கரூர் மாவட்டம் - குளித்தலையில்

# அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டிடங்கள் - சி.டி.ஸ்கேன் உபகரணங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

கரூர், பிப். 12 -

கரூர் மாவட்டம் குளித்தலையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் சிடி ஸ்கேன் மற்றும் சுகாதார நிலையங்களுக்கு தேவையான உபகரணங்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

கரூர் மாவட்டம் குளித்தலையில் நடைபெற்ற விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூ.40 கோடி மதிப்பீட்டில் குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு புதிய கட்டிடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தும், ரூ.2.50 கோடி குளித்தலை அரசு மருத்துவமனையில், 16 Sice சிடிஸ்கேன் மையம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.1.77 கோடி செலவில் 9 வகையான மருத்துவ உபகரணங்களும் 1.50 மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல், தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் இராமாணிக்கம்(குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), கிருஷ்ணராயபுரம்) க. சிவகாமசுந்தரி கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, துணைமேயர் ப.சரவணன் முன்னிலை வகித்தனர்.

### அமைச்சர் பேச்சு!

விழாவில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன்பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைகிணங்க கரூர் மாவட்டத்தில் குளித்தலை அரசு மருத்துவமனயில் ரூ 250 கோடி குளித்தலை அரசு மருத்துவமனையில் 16 Sice சி.டி. ஸ்கேன் மையம் இன்று பொதுமக்களி பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் முப்பரி மாண கோணத்தில் உடல் உறுப்புகளில் ஏற்பட்டுள்ள நோய்களை கண்டறிந்து சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக அமையும் மேலும், தெளிவாக துல்லியமாக வடிவம் கிடைக்கப்படுவதால் நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்க ஏதுவாக அமையும்.

24 மணி நேரமும் கதிரியக்க மருத்துவர் சி.டி. ஸ்கேன் நுட்புணர் பணியில் இருப்பார்கள். மேலும், ரூ.50 லட்சம் செலவில் இனுங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடமும் நல்லூர், மேலப்பாளையம் தலா ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்களும் கட்டளை மேட்டு மகாதானபுரம் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்கள் ஆக மொத்தம் ரூ 4 கோடி செலவில் 5 மருத்துவ கட்டிடங்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கபட்டுள்ளது.

150 படுக்கைவசதிகளுடன் குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு புதிய கட்டிடம் கட்டும் பணி இன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.1.20 கோடி 2 லேப்ராஸ் கோபிக் ஹைடெபினசன் கமராசிஸ்டம் செட் ரூ17.70 இலட்சம் 1 ஆட்டோமேட்டட் கொயகுலேசன் அனவைசர் சி.எஸ் 2400 ரூ.9.40 இலட்சம் 3 டிபெயிரியே ட்டர்கருவி. ரூ.6 இலட்சம் வாக்இன்கூலர் ரூ.2.23 இலட்சம் 2 மல்டிபேராமானிட்டர், ரூ.1.70 2 இசிஜி மெஷின், ரூ.2.10 இலட்சம் 4 இன்பியூசன்பம் ரூ.4.78 இலட்சம் யையோசேப்டி கேபினட் கிணஸ்ரூ.395 இலட்சம் 10 ஸ்டுடண்ட் பைனாகுலர் மைக்ரோஸ் கோப் மேக்னஸ்மேக் மாடல் ஆகமொத்தம் ரூ.1.77 கோடிசெலவில் 9 வகையான மருத்துவ உபகரணங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் கழக ஆட்சி அமைந்ததற்கு பின் திறந்து வைக்கப்பட்ட கட்டிடங்கள் ரூ.3.85 கோடி செலவில் 10 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் ரூ.200 கோடி செலவில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவு, பொது சுகாதார ஆய்வகம் செவிலியர் குடியிருப்பு கட்டிடங்கள் ஆகிய மருத்துவ சேவைகள் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

### மருத்துவக் கட்டமைப்பு பணிகள்!

மேலும், கரூர் மாவட்டம் பள்ளபட்டி அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ6.37 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் 3 தளங்களுடன் புதிய கட்டிடமும், சின்னதாராபுரத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், மலை கோவிலூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம். காணியாளம்பட்டியில் ரூ. 50இலட்சம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம். பஞ்சப்பட்டியில் ரூ. 50இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகுகட்டிடம் குளித்தலையில் ரூ. 1:10 கோடி மதிப்பீட்டில் புதியகட்டிடம். இனாம் கரூரில் ரூ1.20கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் உப்பிடமரிககமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் சேங்கல் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் பசுபதிபாளையத்தில் ரூ.1.20 கோடிமதிப்பிட்டில் புதிய கட்டிடம் வி.விஜிநகர் ரூ.1.20கோடி மதிப்பீட்டில் புதியகட்டிடம் 11 அரசு மருத்துவமனைகளுக்கு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

குப்பம் பகுதியில் ரூ 3இலட்சம் மதிப்பீட்டில் குப்பக்கவுண்டன் வலக ரூ.35இலட்சம் மதிப்பீட்டிலும், இராஜேந்திரம் பகுதியில் ரூ.30இலட்சம் மதிப்பீட்டிலும். கீழவெளியூர் பகுதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், மனத்தட்டை பகுதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆண்டான்கோவில் பகுதியில் ரூ.30இலட்சம் மதிப்பீட்டில் மாங்கா சோளியா பாளையம் பகுதியில் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் கடவூர் பகுதியில் ரூ 30 இலட்சம் பாதிரிப்பட்டி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஆக மொத்தம் ரூ.17.52 கோடி செலவில் துணை சுகாதார நிலையங்க ளுக்கான 20 புதிய மருத்துவ கட்டிடங்கள்நடைபெற்று வருகின்றது.

கரூர் மருத்துவ கட்டமைப்புகள் 194 துணை சுகாதார நிலையங்கள். 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள். 1 மாவட்ட தலைமை மருத்துவனைகளும் 1 வட்டம் சாரா மருத்துவமனை, வட்டார மருத்துவமனை 1 மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டமைப்புகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின் படி 708 நகர்ப்புற நலவாழ்வு மையம் கரூர் மாவட்டத்தில் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் (கரூர் மாநகராட்சி8) ரூ. 2 கோடி செலவில் அமைக்கும் பணி நடைபெறுகிறது. இதில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று கரூர் மாநகராட்சியில் இடங்களில் திறந்து வைத்தார் மேலும் 4 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது விரைவில் திறந்து வைக்கப்படும் 50 ஆரம்ப சுகாதார நிலையம் ஒதுக்கீடு. ரூ.1.20 கோடி விவிஜி நகர் வெங்கமேடு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைச்சர் ( செந்தில்பாலாஜி) கோரிக்கையின்படி மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2023-24(கரூர்மாவட்டம்). ரூ. 11.54 கோடி மதிப்பீட்டில் 24 அறிவிப்புகளின் மூலம் கரூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகிய வற்றிற்கு பல்வேறு மருத்துவ கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

கரூர் மாவட்டத்தில் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2023-24 கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.40இலட்சம் மதிப்பபீட்டில் உடற் கூறாய்வு மையக் கட்டிடம். கோடங்கிபட்டியில் ரூ.35இலட்சம் புதிய துணை சுகாதார நிலைய கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது.

தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NGASNational Quality Assurance Standards Certificate) pa 614, ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 545 விருதுகள் பெற்றுள்ளது. கரூர் மாவட்டம் 18. குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமணை கடவூர் ஆரம்ப சுகாதார நிலையம், ஒலபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம். விஸ்வநாதபுரி ஆரம்ப சுகாதார நிலையம் தோகைமலை சமுதாய சுகாதார நிலையம் கோவிந்தபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் வடக்குபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம். அரவக்குறிச்சி அரசு மருத்துவமனை, கேபரமத்தி ஆரம்ப சுகாதார நிலையம், காவல்காரன் பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் இணங்கூர் சமுதாய சுகாதார நிலையம் குரும்பபட்டி ஆரம்ப சுகாதார நிலையம், புன்னம் ஆரம்ப சுகாதாரநிலையம் வேப்பங்குடி ஆரம்ப சுகாதார நிலையம் கொட்டபட்டி துணை சுகாதார நிலையம், மின்னம் பள்ளி துணை சுகாதார நிலையம். வலையப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், உப்பிடமங்களம் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய 18 மருத்துவமனைகளுக்கு தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது கிடைத்து ள்ளது. அதுமட்டுமல்லாமல் மகப்பேறு அறை கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்டa (LaOshya Labour Room Quality inprovement Initiative) தமிழகம் இதுவரை 84, ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 55, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கிடைத்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடைக்கோடி மக்களுக்கும் உயிர் காக்கும் மருத்துவம் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் செயல் பட்டு வருகிறார் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

பின்னர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் 5 பயணிகளுக்கு மருத்துவ காப்பீடு திட்ட அட்டையினையும். காசநோய் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து தொகுப்பு தொழுநோயால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு சுய பாது காப்பு பெட்டகம். சிறப்பு காலணிகள் மற்றும் கண் கண்ணாடிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவகர் மகண்ணன். கரூர் மருத்துவ மனை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. தாமோதரன் இணை இயக்குனர் (நலப்பணிகள்) மரு. ரமாமணி, துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்)மரு. சந்தோஷ்குமார் வட்டார மருத்துவ அலுவலர் மரு. பூமிநாதன், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர்.தி.தேன்மொழி, குளித்தலை நகர்மன்ற தலைவர் ப. சகுந்தலா மண்டல தலைவர்கள் ராஜா, கனகராஜ், சக்திவேல் மற்றும் உள்ளாட்சி பிரதி நிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம்,ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை விடுதி ஊராட்சி சூத்தியன்பட்டி பகுதியில் அமைந்துள்ள ஊர்ப்புற நூலகத்திற்கு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, தனது சொந்த நிதியில் இருந்து மேசை, இருக்கைகள் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைத் மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அ வழங்கினார். உடன் மாவட்டப் பிரதிநிதி கே.வி.எஸ்.ஏ. மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்காடு எம்.வி. சோலையப்பன்

பிப்ரவரி 12 (1972)



கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்று, காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி தமது பகுதியில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

மாங்காடு பேரூராட்சி தலைவராகவும் – குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகத்தின் முதல் ஒன்றியப் பெருந்தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

மன்னார்குடி தொகுதி - சாத்தனூர் ஊராட்சி கருவாக் குறிச்சி - தளிக்கோட்டையில்

# 704 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்!

மன்னார்குடி, பிப் 12 -

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட முக்குளம் சாத்தனூர் ஊராட்சிக்குட்பட்ட கருவாக்குறிச்சி தளிக்கோட்டை காலனி, பகுதிகளை சேர்ந்த 704 குடும்பங்களுக்கு இலவச வீடு மனை பட்டாக்களை மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கி பேசினார்.

மக்களின் 80ஆண்டு கனவுகளை திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் தளபதி அவர்கள் நிறைவேற்றி தந்திருக்கிறார் என பெருமிதத்தோடு குறிப்பிட்டார். விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்செல்வன், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, ஊராட்சிமன்ற தலைவர் வீரா.தேசபந்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முததமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட முக்குளம்சா த்தனூரில் நடைபெற்றது. இந்த பகுதியில் வசித்த மக்களுக்கு கடந்த 1989 ம் ஆண்டு கழக ஆட்சியில் கலைஞர் அவர்களால் வீட்டுமனைகள் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மீதமுள்ள மக்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்குவதில் ஏற்பட்ட நிர்வாகதாமதத்தால் மக்கள் அவதிப்பட்டனர்.

இதுகுறித்து கடந்த தேர்தல் அறிக்கையில் இங்குள்ள மக்களுக்கு வீட்டு மனைப் ப்பட்டா வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று திமுக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் கழகம் ஆட்சிப்பொருப்பெற்றதும்,மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர். பி.ராஜா அவர்கள் முதல்வரிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படியில் முக்குளம்சாத்தனூர் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க முதல்வர் தளபதி அவர்கள் ஆணையிட்டதின் அடிப்படையில்704 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வசங்கும் நிகழ்வு கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழாவில் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினராகிய தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா பங்கேற்று பட்டாக்களை வழங்கினார்.

முன்னதாக விழாவுக்கு வருகைதந்த தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவை முக்குளம் சாத்தனூர் பகுதி மக்கள் சாதி, மத, இன, பாகுபாடுகள் இன்றியும் அரசியல் பாரபட்சம் இன்றியும் ஒன்றுசேர்ந்து பல்லாயிரக்கணக்கில் திரண்டு நின்று ஆரத்தி எடுத்தும் , செண்டை மேளங்கள் முழங்கவும் வரவேற்றனர்.

விழாவில் பங்கேற்று பேசிய தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா பேசும்போது ,

இந்த பட்டா கிடைக்க தலைவர் கலைஞர் அவர்களும், முன்னாள் அமைச்சர் மன்னை.நாராயணசாமி அவர்களும் ,மரியாதைக்குரிய எல்.ஜி அவர்களும் , மரியாதைக்குரிய நாஞ்சில் மனோகரன், மரியாதைக்குரிய கு.பா. கிருஷ்ணன், மரியாதைக்குரிய மாணிக்கம் , மரியாதைக்குரிய முன்னாள் சட்டமன்ற உருப்பினர் பி. ராஜமாணிக்கம் போன்றவர்கள் அன்றைக்கு தொடங்கிய அந்த உழைப்பின் பலன் இன்று திராவிட நாயகர் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியில் முழுமையாக வெற்றி பெற்று இருக்கிறது.

மேலும் இந்த நிகழ்வில் அரசியல் பாரபட்சம் இன்றி அனைவரும் இங்கே வந்து வாழ்த்திய நிகழ்வு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்திருக்கும் மற்றுமொரு வெற்றியாகும். “எல்லோருக்கும் எல்லாம்” என்கிற தாரக மந்திரத்தை முன்னெடுத்து ஆட்சி நடத்தும் நம் தளபதியாரின் வெற்றிக்கு இது சான்றாகும். இங்கேநான் வரும் வழியில் ஒரு பெண்மணி என்னிடம் குறிப்பிடும் போது இன்றுவரை இத்தனை வருடங்களாக என்னை “புறம்போக்கு” என்று ஏளனம் செய்தார்கள் , இன்று முதல்வர் தளபதி அவர்களின் இந்த ஆணையால் கிடைத்தி ருக்கும் இந்த பட்டா என்னை நிலத்திற்கு சொந்தக்காரி ஆக்கி தலைநிமிர செய்திருக்கிறது என்று பெருமையோடு குறிப்பிட்டார். மேலும் இந்த பட்டாக்கள் அனைத்துமே குடும்ப தலைவிகள் பெயரால் வழங்கப்பட்டு அவர்களிடமே ஒப்படிக்கப்பட்டிருக்கிறது ,இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பும் வெற்றியும் ஆகும்.

இன்னும் எஞ்சியுள்ள பட்டா இல்லாதவர்களுக்கும் விரைந்து பட்டா வழங்கப்படும், மேலும் வீடு இல்லாதவர்களுக்கும் வீடுகள் கட்டித்தரப்படும், மன்னார்குடி தொகுதியில் அனைவருக்கும் பட்டா, குடிசைகளே இல்லாத தொகுதி என்கிற பெருமையை நமது முதல்வர் தளபதி அவர்கள் ஏற்படுத்தி தருவார். மேலும் நவீன சர்வதேச தரத்தில் மன்னார்குடி புதிய பேருந்து நிலையம் விரைவில் அமைய இருக்கிறது. அப்போது மன்னார்குடி முழுவதும் மின்னும் மன்னையாக மாறும்.அது விரைவில் நடைபெறும். எந்த ஒரு மக்கள் திட்டங்களையும் தராத அரசாக ஒன்றிய பி.ஜே.பி. அரசு செயல்பட்டு வரும் நிலையில் ஒவ்வொரு மக்களின் உயர்வுக்கான திட்டங்களை வீடுகள் தோறும் தந்து. நல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களுக்கு மக்கள் எப்போதும் நன்றிகடன் பட்டவர்களாக இருப்பார்கள் என குறிப்பிட்டு பேசினார்.

இந்த விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்செல்வன்,துணை தலைவா ஞானசேகரன், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், ஊராட்சிமன்ற தலைவர் வீரா.தேசபந்து, மாவட்ட துணை செயலாளர் எம். எஸ்.கார்த்திக், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ். பாண்டியன் ,பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன்,ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா,கவியரசு,கே.வி.கே. ஆனந்த், பால.ஞானவேல், நகர செயலாளர் வீரா கணேசன், மாவட்ட மகளிரணி தலைவர் ராணி சேகர் மற்றும் கழக நிர்வாகிகள், ஊராட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் , அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பெருந்திரளாக பங்கேற்றனர்.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த சிவாஜி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள்- 10.02.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிஞர் குடியரசு

பிப்ரவரி 12 (2002)



“திராவிட இயக்கத்தின் தீப்பொறிக் கவிஞராகவும், எரிமலைக் கனல் உமிழும் எழுச்சிக் கவிஞராகவும் திகழ்ந்தவர். தத்துவக் கவிஞர் குடியரசு.

“என் தலைமையில் பகுத்தறிவுப் பாடல்களை – இன உணர்வுக் கவிதைகளை வழங்கியவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூறப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

